உ



கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்
மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் இராசமலர் சதாசிவம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# மலர் வாசம்

**26-03-2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்




கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்,
மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்

# இராசமலர் சதாசிவம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# மலர் வாசம்

## 26.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
காணிக்கையாக இந்நூல்

# சமர்ப்பணம்

பாசமிகு குடும்பத் தலைவியாய்
உற்ற துணைவியாய்
அன்பிலுயிர்த்தாயாய், சகோதரியாய்
இல்லறம் சிறக்க இனிதுழைத்த தாயே!
நல்லறம் காட்டி வழி நடத்திய தெய்வமே!
உம்மைப் பிரிந்து
எங்கள் மனங்கள் நொந்து வாடி
பேதலித்துத்தவித்த போதும்
உம் ஆத்மா
இறைவனடியில் அமைதியுற வேண்டி
இம் மலர் வாசத்தை - உம்
பாதார விந்தங்களில்
சமர்ப்பணம் செய்து
ஆறுதலடைகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – இன்று
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட
எங்கள் அன்புத் தெய்வம்



மண் மகிழ
21.06.1946

விண் சிறக்க
24.02.2023

அமரர்

# இராசமலர் சதாசிவம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சுபகிருது மாசி மாத பூர்வபஷ்ச பஞ்சமி திதியில்
கா விளம்பு சந்திரனார் வளர்ந்துவர – மாவிளம்பு
பண்பின் இராசமலர் எனும் அமரர் உலகுவிட்டுக்
கண்டார் சிவனார் கழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத் தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவொ எமை ஆளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள்
ஆவடுதுறை அரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருபெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென் றருள்புரி யாயே

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் அன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாநிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

வேழ முண்ட விளா கனி - யதுபோல
மேனி கொண்டு வியாபக - மயலூறி
நாளுமிண்டர்கள் போல் மிக - அயர்வாகி
நானுறைந்து விடாதருள் - புரிவாயே
மான அன்ற மணீசர்கள் - கழுவேற
வாதில் வென்ற சிகாமணி - மயில்வீரா
காள கண்டனு மாபதி-தருபாலா
காசி கங்கையில் மேவிய - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சியப்ப முனிவர் அருளிய
# காரிய சித்திமாலை

1. பந்தம் அகற்றும் அனந்தகுணப்
   பரப்பும் எவன்பால் உதித்திடுமோ
எந்த உலகும் எவனிடத்தில்
   ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
   அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
   அன்புகூரத் தொழுதிடுவோம்!

2. உலகம் முழுதும் நீக்கமற
   ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகில் பிறங்கும் விவகாரங்கள்
   உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப்பயனை
   ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
   உவந்தே சரணம அடைகின்றோம்!

3. இடர்கள் முழுதும் எவனருளால்
   எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
   சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
   கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
   சரணம் சரணம் அடைகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மூர்த்தி ஆகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினை யின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடனநவிலும்
விமலன் யாவன் விளங்கும்பர
நாத முடிலில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன் அப
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மண்ணின் ஒர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காம்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாய்
அண்ணல் எவன் அக் கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்!

8. பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பயன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பிணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்!

**இந்த காரியசித்தி மாலையை எவன் மூன்று தினங்கள்
தொடர்ந்து ஒரு நாளைக்கு மூன்று வேளைகள்
பாடுகின்றானோ, அவன் எச்செயலைத்
தொடங்கினாலும் வெற்றி பெறுவான்!**

**எட்டுத் தினங்கள் பாடினால் மனம் மகிழ
மங்கல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறுபதிகம்



(திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய இப்பதிகத்தை நாள்தோறும் பாராயணம் செய்வோர்க்கு, நவகோள்களால் ஏற்படக்கூடிய இன்னல்கள் யாவும் நீங்கி இனிய நல்வாழ்வு அமையும்.)

பொது பண் :பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (01)

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்த்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (03)

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (04)

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (05)

வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (06)

செப்பிள முலைநல்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (07)

வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (08)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோன் மால் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (09)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

*(10)*

தனமர்பொழில்கொளாலை விளைசெந்அநல்துன்னி
வளர் செமபொனெங்குநிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளு மடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானில்
அரசாள்வராணைநமதே. *(11)*

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டக ஸ்லோகங்கள்



ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் *(01)*

தேவமுனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் *(02)*

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் *(03)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (04)

குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (05)

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (06)

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (07)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம் பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்
லிங்காஷ்டக மிதம் புண்யம் யஹ் படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே (08)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே.
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இராசமலர் சதாசிவம் அவர்களின் வாழ்க்கைப் பாதையிலே ....

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணம் கோண்டாவில் பதியில் நெட்டிலிப்பாய் பிள்ளையாரை குல தெய்வமாக கொண்ட ஏர் பெறுகுடிதனில் பிறந்த பெருமகனாம் இரத்தினசிங்கம் அன்னபூரணம் தம்பதியினரின் இரண்டாவது மங்கையாக உதித்தவரே இராசமலர்.

மூத்தவர் பாலசுப்பிரமணியம் (அமரர்) சிலோசனாவையும், மூன்றாவது மகளாக வந்த இராஜேஸ்வரி செல்வரத்தினம் (அமரர்) அவர்களையும், நான்காவது மைந்தனான சிவராசா யோகலட்சுமியையும் கரம்பிடித்து இல்லறம் காண்கின்றனர். ஐந்தாம் பொன் மகளாம் யோகேஸ்வரி கிருஷ்ணதாசனை மணம் முடித்து கனடாவில் வாழ்கின்றார்.

அன்பும் அழகும் சாந்தமும் சாத்வீகமும் கொண்டவராக விளங்கிய இராசமலர் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க தனது கல்வியை யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கற்றார். கல்வியே கருத்தனம் என எண்ணிக் கற்றுவரும் நாளில் குடும்பச் சூழ்நிலை காரணமாகத் தன் கல்வியை நிறுத்திப் பெற்றோருக்கு உறுதுணையாக நின்று சகோதர சகோதரிகளின் எதிர்காலத் திட்டத்திற்குப் பக்கபலமாக இருந்தார். இவ்வாறு குடும்பத்தின் அச்சாணி போல் வாழ்ந்து வரும் நாட்களிலே கலைநயம் கொண்டவராய் தன் முயற்சியுடன் தையற்கலையில் சிறந்து விளங்கி மணமுடை மலராய்த் திகழ்ந்திடும் வேளை திருநெல்வேலியைச் சேர்ந்த பெருமகனாம் பிரபல வர்த்தகர் பொன்னையா சதாசிவம் அவர்களுடன் உறவுகளும் உற்றாரும் வாழ்த்தி நிற்க திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

இன்பமும் துன்பமும் இணைந்தே நிற்க சிவனம்மன் ஆலயத்தினைத் தினமும் தொழுது இல்லற வாழ்வை நடாத்தத் தொடங்கியது மட்டுமல்லாது சிறுவயதில் தந்தையை இழந்த தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர, சகோதரிகளையும் தாயையும் தன் கணவரின் துணை கொண்டு அரவணைத்து உயர் நிலையில் வாழ வைத்த பெருமை இவர்கள் இருவரையுமே சாரும்.

இல்லறம் இனித்திட ஆனந்தம் கொண்டே நற்குண சீலர்களாக குசலகுமாரி, நவகுமாரி, நந்தகுமார், நவகுமார், நந்தினி, நிமலகுமார், செந்தூர் எனும் எழுவரைப் பெற்றெடுத்து நானிலமும் போற்றும் வண்ணம் கல்வியில் விளங்க வழிகாட்டினார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வரும் வேளை தக்க பருவமதில் ஒவ்வொருவருக்கும் ஏற்ற நல்ல வாழ்க்கைத் துணையை இணைத்து இன்றுவரை பேரர்கள், பூட்டர்கள் எனக் கண்டு மகிழ்ந்தார்.

மூத்த புதல்வியான குசலகுமாரிக்கு யோகரெட்ணம் அவர்களை மூத்த மருமகனாய் ஏற்று வாழ்ந்திடும் பொழுதினில் பவிதன், கம்சன், சங்கீதா, தனுசியா எனும் ஈரிரண்டு பேரர்களைக் கண்டு அக மகிழ்ந்தார்.

இரண்டாம் மகளாம் நவகுமாரியை மோகனதாஸ் அவர்களிற்கு கரம்பிடித்துக் கொடுத்து இரண்டாம் மருமகனாய் ஏற்று இல்லறத்தில் இனிதே வாழ்ந்திடும் வேளை மோகனலக்ஷன், யுவலக்ஷி இருவரையும் பேரர்களாகக் கண்டுள்ளம் மகிழ்ந்தார்.

மூன்றாம் மைந்தன் நந்தகுமாரிற்கு விஜயலட்சுமியை மருமகளாக்கிக் கர்ணிகாவைப் பேர்த்தியாகக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார்.

கனடாவில் வாழும் நான்காம் மைந்தன் நவகுமாரிற்கு இல்லறம் இனித்திட சாரதாவை மருமகளாக்கி நவீனா, பகீரா ஆகியோர் பேர்த்திகளாக உதித்திட அக மகிழ்ந்து இன்புற்றார்.

ஐந்தாம் மகள் நந்தினிக்கு தந்தையின் உறவு வழியான பார்த்திபனை மணம் முடித்து இல்லறம் இனித்திட கஜேந்திரன், தரங்கினி, நிருபன், வினுர்ஷாந் எனும் நான்கு பேரர்களைக் கண்டு இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் மைந்தன் நிமலகுமாரிற்கு தாய் மாமன் மகளான லிந்துயாவை மருமகளாக்கி பைரவி, சகானா ஆகியோர் பேர்த்திகளாக திகழ்ந்திட இன்புற்றார்.

தனது முதற் பேர்த்தியான சங்கீதா மயூரனின் திருமண பந்த உறவில் அளவில்லா ஆனந்தம் கொண்டார். அவர்களின் இல்லறம் இனித்திட வழிகாட்டி ரோகீசன், கர்சினி, டினீசன், ரோசினி எனும் பாசமிகு பூட்டர்களையும் கண்குளிரக் கண்டு மனம் மகிழ்ந்தார்.

ஆணிவேராக அனைவருக்கும் வழிகாட்டி, தளர்வுற்ற காலத்திலும் நேரம் தவறாது ஆலயத் தொண்டாற்றிய தன் கணவருடன் ஈருடல் ஓருயிராக வாழ்ந்து வரும் நாளில் உற்ற துணையாய் நின்ற ஆலமரமே சாய்ந்தது போல் நொடிப் பொழுதில் கணவரைப் பிரிந்து தனிமரமானாலும் நிழல் கொடுக்கும் பெரு விருட்சமாய் திகழ்ந்தார்.

காலம் உருண்டோட தன் கடைசி மைந்தனான செந்தூரிற்கு யசினியாவைக் கரம்பிடித்து ஜனகன் எனும் அன்புப் பேரனைக் கண்டு பேரின்பமடைந்தார்.

தன் அழகிய வாழ்க்கைப் பாதையில் பேரர்களின் குறும்புத் தனங்களால் துன்பம் நீங்கிப் பூட்டர்கள் மனம் மகிழ மழலைகளுடன் மழலையாய் வாழ்ந்தார்.

பேரனான மோகனலக்ஷனும் மதுசோபிகாவை திருமண பந்தத்தில் கரம் பிடிக்கக் கண்டு அகமகிழ்ந்து பேரின்பம் கொண்டார். பேரன் கம்சனும் டினுசியாவை பதிவுத் திருமணம் செய்யக் கண்டு மகிழ்ந்தார்.

சகோதரர்களுக்கு உற்ற தோழியாய் தன் பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும் தாயும் தந்தையுமாய் பேரர்களுக்கும் பூட்டர்களுக்கும் நல் அறிவூட்டும் ஆசானாய், உற்றாருக்கும் உறவுகளுக்கும் நண்பர் களுக்கும் நல் உறவாகி, காண்பவர் மனம் மகிழ புன்னகை சிந்தி தெய்வ தரிசனமே பணியென எண்ணிப் பார் போற்ற இன்புற வாழ்ந்த வேளை எம் நெஞ்சில் நீங்காதத் துயரளித்து இறைவனடி சேர்ந்தார்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உள்ளத்திலிருந்து...



எங்கே தேடுவோம்

உங்கள் இன்முகம் காண – அம்மா

அன்று முதல் இன்று வரை

அன்புடன் அரவணைத்துப் பரிவுடன்

வாழ்வெனும் கலைக்கு அர்த்தம் சொல்லி

புகழோடு நாம் வாழ வகை சொன்ன

குலவிளக்கு நீர் தானே அம்மா...!

இடர் வரும் பொழுதும்

இன்பமாக வாழ வழிகாட்டிய எம் தாயே...!

யாவரும் வாழ நிழல் கொடுக்கும் பெருவிருட்சமாய்த் திகழ்ந்து

துயில் கொள்ளும் வேளையிலே

கண்விழிப்பீர் எனக் காத்திருந்த எம்மிடம்

எதனையும் கூறாது

நொடிப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தான் ஏனோ...!

செய்வதறியாது திகைத்தோமே அம்மா

வகை சொல்ல யாருமில்லை...

உங்கள் பாசப் பிணைப்பினை யாரிடம் இனிக்காண்போம்

உருகித் தவிக்கின்றோம் அம்மா...

நித்தமும் உம் அழைப்பு ஓசை கேட்ட செவிகள் ஏங்குகின்றன

ஒரு முறை அழைக்க மாட்டீரோ என்று...!

உம் ஆத்மா எம்மோடு உறவாடி வாழ்ந்திடவே

இறைவனின் திருப்பாதம் இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளாய்...



மாமி என்றழைக்க இனி யாருள்ளார் எமக்கு
உங்கள் கனிவான குரலோசையை
நாம் இனிக் கேட்பதெப்போது...
உங்கள் பிள்ளைகளின் கரம்பிடித்து
வாழத் தொடங்கிய நாள் முதல்
எம்மையும் உங்கள் பிள்ளைகளைப் போல் அரவணைத்து
எமக்கெல்லாம் வழிகாட்டிக் குடும்ப விருட்சமாக இருந்தீரே
உறவுகளின் நாயகியாய் அன்பின் குல விளக்காய்
திகழ்ந்திட்ட எங்களின் அருமை மாமியே...!
உங்கள் திருவதனம் காணும் பாக்கியத்தைத் தராது
காற்றுடன் கலந்து விண்ணுலகம் சென்றதேனோ...
யாரிடமும் சொல்ல முடியாத் துன்பத்தில்
பரிதவிக்கின்றோம் மாமியே...
எம் கண்ணீரைக் காணிக்கையாக்கி உங்கள்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**மருமக்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரர்களின் நீங்காத நினைவுகளாய்...

கண் இமைக்கும் காலத்துள் – உமை
காலன் கவர்ந்து சென்றதேனோ!
நெஞ்சிறுகி வாடுகிறோம் எமை
நெறிப்படுத்த யாருமுண்டோ!



உம் பேரர்களாய் நாம்
இப் பாரினிலே பிறந்தது முதல்
உம் பாசக் கடலில் மூழ்கி
நேசக் கரங்களில் மிதந்தோமே

அன்பு முதல் அறம் வரை
பண்பு முதல் பணிவு வரை
கனிவு முதல் கடமை வரை
பொறுமை முதல் பொறுப்பு வரை
அத்தனைக்கும் அகராதி நீர் – அதை
எமக்களித்தவரும் நீர்.

அறியாத வயது முதல் – நாம்
வளர்ந்து ஆளான நாள் வரை
அன்பு கொண்டு அணைத்ததில்
உமக்கு நிகர் யாருமுண்டோ!

கண் கலங்கி நின்றாலே – எமை
கட்டியணைத்து தோள் கொடுத்தீர் – இன்று எம்
விழி நீர் வழி நனைத்தும் – உம்
விழி மூடி நிற்பதேனோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதான காலத்திலும் எமை வழியாக்க பல செய்தீர்
நிறைவாக நாம் வாழ நிழலாக நீர் நின்றீர் – எம்
எதிர்கால பயணம் பற்றி ஏராளம் கனவு கண்டீர்
உம் கனவெல்லாம் பலிக்கும் முன்னே – எம்மை
தவிக்கவிட்டு சென்று விட்டீர்....

கண் அயர்ந்த தூக்கமென்றே
கடைசி வரை நினைத்திருந்தோம் – அதுவே
உம் கடைசி துயிலென்று
கடைசி வரை எண்ணவில்லையே
ஒரு வார்த்தை அழைத்திருந்தால்
ஓடோடி வந்திருப்போம்
ஈர் எட்டு பேரர்களும்
எமனுடன் சண்டை செய்திருப்போம்.



இதயம் ஏனோ கனக்கிறது – நீர்
இல்லை என்று எண்ணும் போது
உதடு கூட திணறுகிறது – நீர்
அமரர் என்ற வார்த்தை கூற

நினைவு என்றும் மறக்காது
நீர் தந்த பாசத்தை – எம்
அறிவென்றும் மாறாது – உம்
அறத்தின் வழியில் இருந்து
உங்கள் ஆத்மா சாந்திபெற எம் கண்ணீர்ப் பூக்களால்
கசிந்துருகிப் பிரார்த்திக்கின்றோம்.

**-என்றும் நினைவுகளுடன் பேரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கை, மைத்துனர் ஆழ் மனத்திலிருந்து....

எங்கள் அன்புத் தெய்வமே
வாடா மலரே
வாடி வீழ்ந்தது ஏன்?

எங்கள் தந்தை, தாய், குரு, சகோதரி, சினேகிதி
எல்லாம் நீங்களே...
ஒவ்வொரு நாளும் தொலைபேசியில்
சந்தோஷம், துக்கம், சோகம், வேதனை
எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டோமே.



சிவராத்திரி இரவு தொலைபேசியில் பேசும் போதும்
அத்தானைக் கனவு கண்டேன் – அவர்
கூட்டிக்கொண்டு போகப் போகிறாரோ என்றீர்கள்
என்னையும் கூட்டிப் போகும்படி கூறினேனே
என்னைத் தவிக்கவிட்டு நீங்கள் மட்டும்
துணைவர் நாடி சென்றதேனோ!

எத்தனை உறவுகள் இருந்தாலும்
உங்களை போல் உறவை எங்கே தேடுவேன்.
உங்கள் பிரிவிலிருந்து மீள முடியாமல் தவிக்கும்

**அன்புத் தங்கை**
**குஞ்சு, மைத்துனர் ராசா**



**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறா மக்கள், பேரப்பிள்ளைகள் இதயத்திலிருந்து...

எங்கள் அன்பின் பாசமலரே
பெரிய பெரியம்மா பெரிய அப்பம்மா
உங்களை நேரில் பார்க்கவர இருந்த நேரம்
கொரோனா என்ற கொடிய நோய்
உலகத்தையே புரட்டிப் போட வர முடியவில்லை

அடிக்கடி தொலைபேசியில் உங்கள் பாசமழையை பொழிந்தீர்கள்
இம்முறை எப்படியும் பார்ப்போம் என்று ஆவலுடன் இருந்தோமே
அதற்குள் கொடிய காலன் முந்திக் கொண்டானே

எல்லோரையும் கண்ணீரில் கதறவைத்து
காணொளியில் உங்களை காண வைத்து
மீளாத்துயில் கொண்டீர்களோ
எங்களின் பாசப் பறவையாய் இருந்து
எங்களை மறந்து பறந்து சென்றதேனோ
அவ்வளவு அவசரமோ?
எங்களை ஏமாற்றி மீட்கமுடியாத நெடுந்தூரம் சென்றதேனோ



உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



**உங்கள் பிரிவால் வாடும்**
**பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்**
**கனடா, பிரான்ஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அக்காவின் நினைவுகளில்...



ஒரு தாயின் வயிற்றில் பிறந்த
அன்பின் அக்காவே...!
சிறுவயது முதல் இன்று வரை
அன்னையின் இருப்பிடமாய்
அன்பின் உறைவிடமாய்
ஊர் போற்றும் அளவிற்கு
ஒரு கொடியில் மலர்ந்த
மலர்களைப் போல் ஒன்றிணைந்து
வாழ வழி காட்டினீரே அக்கா!
அன்று முதல் இன்று வரை
நீர் எம்முடன் வாழ்ந்து
கதைத்துச் சிரித்த நாட்களை
எண்ணிப் பார்க்கின்றோம் அக்கா...
தாங்க முடியவில்லை உம்பிரிவு...!
உடன் பிறப்புகளாக நாம் இங்கிருக்க
தனியாக வழி தேடிச் சென்றதேனோ...!
ஏங்கித் தவிக்கின்றோம்...
உம் ஆறுதல் வார்த்தை இன்றி அக்கா!
உம் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**சகோதர சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டர்களின் உள்ளத்திலிருந்து...



பாட்டி எனும் பெயருடன்
இவ் உலகில் பலர் இருக்க
நாம் பார்த்த பாட்டி நீரே...
ஆசையாய் எம்மை அழைத்து
உம் இருக்கையில் ஓரிடம் தந்து
முத்தமிட்டு மிட்டாய் தந்து
சிரிக்க வைத்த நாட்கள் எம்முள் பதிந்திட...
பாட்டி கடவுளிடம் போய் விட்டார் – என்ற
அழுகை ஒலி கேட்ட போது
எம் உள்ளம் பாட்டி இன்று வருவார்...
நாளை வருவார் எனப் பார்த்துக் கொண்டிருக்கவே
பலர் கூடி உம்மைத் தூக்கிச் சென்ற இடம்தான் எதுவோ...?
ஏன் இன்னும் எம்மைப் பார்க்க வரவில்லை?
எங்கு தான் சென்றீரோ... பாட்டி...!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்கள்**
**நினைவுகளுடன் பூட்டர்களான**
**ரோகீசன், கர்சினி,**
**டினீசன், ரோசினி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நினைவிற் கொள்க

- நல்ல குரு அமைந்தால் ஆண்டவன் கொடை.
- நல்ல துணை அமைந்தால் ஆண்டவன் கருணை.
- நல்ல பிள்ளை அமைந்தால் ஆண்டவன் அருள்.
- வாழ்க்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி தெரியாத பயணம்.
- மாணவர்களே அறியாமையுடன் நூற்றாண்டுகள் வாழ்வதைவிட, அறிவு டன் ஒருநாள் வாழ்வது மேல்.
- தன்காலில் நிற்க எது உதவுமோ அது கல்வி பிறப்பு அன்னையால் சிறப்பு கல்வியால்.
- பணிவு என்பது தாழ்வின் சின்னமல்ல, உயர்ந்த ஒழுக்கத்தின் அறிகுறி.
- அறிவு உள்ளவனுக்கும் முயற்சி உள்ளவனுக்கும் வறுமை தடையாகாது.
- உழைப்பு உடலைப் பலப்படுத்தும், துன்பங்கள் மனதைப் பலப்படுத்தும்.
- அறிவுச் சுரங்கத்தை திறப்பதற்கான திறவுகோல் மன ஒருமைப்பாடு ஆகும்.
- பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்.
- பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை செய்யத் தவறாதீர்கள்.
- தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்.
- உண்மையானாலும் பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
- முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் எனச் சொல்லாதீர்கள்.
- விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எவரையும் வர வேற்று உபசரிக்க பின்நிற்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

**" ஏந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு "**

எங்களின் இதயத்தில் நீக்கமறத் தெய்வமாக நிறைந்திருந்து உற்றார் உறவினர் அயலவர்கள் நண்பர்கள் அனைவரதும் நலன்களில் உறுதுணையாக நின்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என அனைவருடனும் அன்புடன் சேர்ந்து உறவாடி அறிவுரைகள் பகிர்ந்து, சுக துக்கங்களில் உறுதுணையாக இருந்து அமரத்துவம் எய்திய **அமரர் இராசமலர் சதாசிவம்** அவர்களின் திடீர் இழப்புச் செய்தியை அறிந்தவுடன் நேரில் வந்து எம் துயரத்தில் பங்கு கொண்ட அனைத்து உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் கண்ணீர் அஞ்சலிகளைப் பிரசுரித்த அன்பர்களுக்கும் மலர்வளையங்களைச் சாத்தி அஞ்சலி செய்தோருக்கும் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு துன்பத்தைப் பகிர்ந்து கொண்ட யாவருக்கும் மேலும் நாம் துயருற்று இருந்த வேளையில் தேநீர், சிற்றுண்டி, உணவுகளைத் தந்துதவிய நல் உள்ளங்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினர் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகள்

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலில் பெரிது"**

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

தீபம் பிறிண்டேர்ஸ்.யாழ் 077 ... 234

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org